வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, யூன்- 2017
## Term Examination, June - 2017

FWC

| தரம் :- 13 (2017) | புள்ளித்திட்டம் | தமிழ் - I |
|---|---|---|

(1) i. அ. தோழி, நீ வாழ்வாயாக மிக்க வலிமையுடைய பெரிய பிளந்த வாயை உடைய ஆண் புலியானது மதநீரால் கன்னம் நனைந்த தலைமையை உடைய யானையினது அழகிய முகத்தின் மீது பாய்ந்தது. அதனால் அந்த யானையின் வெண்ணிறமான தந்தம் இரத்தத்தால் சிவந்த நிறமாகியது பிளந்தமலைப்பகுதியின் குகையில் மேலைக்காற்று வீழ்த்திய கரிய அடியினை உடைய வேங்கை மரத்தின் வாடிய பூக்களை உடைய கிளையைப் போல் புலி வீழ்ந்து கிடந்தது. இத்தகைய உயர்ந்த மலைநாட்டினான தலைவனோடு நீ உடன் போக்கில் செல்லுவதை எண்ணுவாயாக.

ஆ) உயர்ந்த மலைகளை உடையது
வேங்கை மரங்கள் வளர்ந்து செழிப்பாகக் காணப்படும்
வலிமை மிக்க யானை புலி போன்ற மிருகங்கள் வாழ்வது

இ) கோடையொற்றிய கருங்கால் வேங்கை
வாடுபூஞ்சினையிற் கிடக்கும்....
வேங்கை மரத்தின் மலர் விழுந்து கிடப்பாதைப் போல
வரிகளையுடைய புலி இறந்து கிடக்கிறது
உவமானம் - வேங்கை மரத்தின் பூ
உவமேயம் - புலி
பொதுத்தன்மை - தோற்றம்

(12புள்ளிகள்)

ii. அ. சூரிய உதயக்காட்சி

புகை போன்ற கரிய இருள் துள்ளி ஓடிப் போக மாளிகைகளின் உள்ளே எரியும் விளக்குகள் ஒளி மங்க கிழக்குத்திசையில் மலைகளுக்கிடையே தோன்றினான்.

ஆ. பாவ வினைகளைச் செய்வதில் முதிர்ந்தவள்.
தசரதனின் அரிய உயிரை மெலியும் படி செய்தவள்

இ. ஏதுத்தற்குறிப்பேற்ற அணி

உதயகாலத்தில் சூரியன் செந்நிறமாய் இருத்தலும் சூரியன் உதிக்கையில் இருள் நீங்குதலும் தீப ஒளி மங்குதலும் இயற்கை. இதனைக் கைகேயியின் பாவச் செயலுடன் தொடர்பு படுத்திக் கூறியுள்ளார். (12 புள்ளிகள்)

(2) அ) i. மக்களுக்கு அறிவை ஊட்டுதல் அறிவை வளர்த்தல் உலக மக்களை ஒன்று சேர்த்தல் மக்களின் இழிந்த செயல்களை நீக்குதல் மக்கள் சிந்தனையைத் தூண்டல்

ii. வானத்தில் நிகழும் மாற்றங்கள் அதிசயங்கள், நல்ல கொள்கைகள், இரகசியச் செய்திகள், ஓவியம், சிற்பம், கூத்து, விகடம், காதல், வீரம்

iii. ஊர், உலகமக்கள் எல்லோரையும் ஒன்று சேர்த்தல் “ஊரினை நாட்ட இந்த உலகினை ஒன்று சேர்க்க”.....

ஏழை, பணக்காரன், உயர்ந்தவன், தாழ்ந்தவன் எல்லோருக்கும் பத்திரிகை ஒன்று தான். “தெருப்பெருக்கிடுவோர்க்கும் செகம் காக்கும் பெரியோருக்கும் கையிருப்பில”......

iv. உவமை அணி
கடும் புதர் விலக்கிச் சென்று களாப்பழம் சேர்ப்பார். போல்......
உருவக அணி :- பத்திரிகைப் பெண்ணாள் (16 புள்ளிகள்)

ஆ) i. பொம்புளகேஸ் ஆபத்தானது என அறிந்து லட்சுமி விடயத்தில் அவதானமாக இருத்தல். லட்சுமி தனது சொந்தமாக இருந்தும அதனைப் பாராது மீண்டும் கொழுந்து எடுக்கும் படி கட்டளை இடல், அவளுக்கு முதல் இது போன்று சந்வீசு உள்ள ஆட்களை அறிந்து வைத்திருத்தல், எல்லோருடைய சந்தேகத்தையும் நீக்கிச் செயலில் இறங்குதல்.

ii. பெண்மைத்தன்மை:-

லட்சுமி மீது சந்தேகம் கொண்டு மீண்டும் நிறை எழுத்துக் காட்டும் படி எல்லோரும் கேட்க தலைகுனிந்து நிற்றல் பொங்கி வழிந்த கண்ணீரை மறைப்பதற்காகத் தலை குனிந்து நிற்றல்

கடமையுணர்வு - எல்லோரினதும் சந்தேகத்தை நீக்க கொழுந்து பறிக்கச் சம்மதித்தல் ''யாரு முடியாதுன்னா என்னாலே எடுக்க முடியும்.

iii லட்சுமியின் நேர்மையையும் தன்மான உணர்வையும் தூண்டுவதற்காகக் கையாளப்பட்ட தொடர் ''லட்சுமி என் நிலைமை புரியும் நினைக்கின்றேன் உன்னாலே மறுபடியும் எடுத்துக்காட்ட முடியும் தானே, என ஐயா கேட்டதற்கு குனிந்திருந்த தலை சட்டென்று நிமிர்ந்தது. ஐயாவை, கங்காணியை அப்புறம் ஆட்களை ஒருமுறை சிலிர்த்துப் பார்த்தது.

iv எளிமையான எல்லோருக்கும் விளங்கத்தக்க மலையகப் பேச்சுத்தமிழ் (16 புள்ளிகள்)

## பகுதி - II

(3) அ. அவை அஞ்சாமையின் சிறப்புப் பற்றி 1 - 3 வரையான குறள்கள் சொற்களில் ஆழமான அறிவு பெற்றிருப்பவர் அலைக்களத்தின் தன்மையை அறிந்து வாய் சோர்ந்தும் பிழைபச் சொல்ல மாட்டார். கற்றவர் அவையில் அஞ்சாது தாம் கற்றவற்றைக் கேட்போர் மனதில் பதியுமாறு சொல்ல வல்லவர் கற்றவர் எல்லோரினும் நன்கு கற்றவர் எனப் போற்றப்படுவர் போர்க்களத்தில் அஞ்சாது போர் செய்து இறந்து போறவர்கள் பலராக இருக்கலாம் ஆனால் அவையிலே அஞ்சாது பேசவல்லவர்கள் சிலரே.

ஆ. 4- 5 வரையாக குறள்கள் - அவர்கள் மேற்கொள்ள வேண்டியவை - கற்றவர்கள் முன்னிலையில் தாம் கற்றவற்றை அவர்கள் மனதில் பதியுமாறு சொல்வதுடன் அவர்களிடம் உள்ள நுட்பங்களையும் அறிந்து கொள்ள வேண்டும். வேற்று வேந்தர் அவையில் அஞ்சாது விடைகூறுதற் பொருட்டு முறைப்படி அளவை நூல்களைக் கற்கவேண்டும்.

இ. 6 -10 வரையான குற்கள் அவை அஞ்சாதவரது இழிவு

- வீரம் இல்லாத ஒருவனுக்கு வாளோடு உள்ள தொடர்பு போலவே நுட்பமாக அறிஞர்கள் கூடிய சபையிலே பேச அஞ்சபவனுக்கு நூலோடு உள்ள தொடர்பாகும்.
- சபைக்கு அஞ்சுபவன் கையில் கற்றநூல் போர்க்களத்தில் அஞ்சுகின்ற பேடியின் கையில் ஏந்திய வாள் போன்றது.
- நல்ல நூல்களைக் கற்றறிந்தும் சபையில் அச்சத்தால் தன் கருத்தை பிறர் ஏற்குமாறு சொல்ல முடியாதவன் பல நூல்களைக் கற்றும் கல்லாதவனே.
- அத்துடன் அவர்கள் கல்வியறிவு இல்லாதவர்களை விட மிகத் தாழ்ந்தவர் என்று கூறுவர்.
- அவைக்கு அஞ்சி தாம் கற்றவைகளைக் கோட்போர் மனதில் பதியுமாறு சொல்ல முடியாதவர் உயிரோடு வாழ்ந்தாலும் இறந்தவர்க்கு ஒப்பாவார்.

(6+ 6+8 புள்ளிகள்)

(4) அ. தசரத மன்னனது அரண்மனையை வந்தடைந்த இராமன் அங்கு பணிப் பெண்கள் கவரி வீசி சந்தோசத்தோடு தாமரைப் பீட சிங்காசனத்தில் தந்தை இருப்பதைக் காணாது கைகேயின் அரண்மனைக்குச் சென்றான் அரச கூட்டமும் முனிவர்களுக்கு உண்மையான புகழை எடுத்துச் சொல்லுகின்ற (சபாமண்டபத்தை அடையாது சிறிய தாயாகிய கைகேயியின் மாளிகையிற் புகுந்தான். 104, 105வது பாடல்கள்)

ஆ. அவ்வாறு கைகேயின் அரண்மனையில் புநந்த இராமனை அரசரும் முனிவரும் எல்லோரும் பாராட்டினார். அவன் தகுந்த செயலை எண்ணினான் என்றும் தனது தந்தையின் திருவடிகளை வணங்கி விட்டு எல்லாத்திக்குகளிதும் உயா்ந்து தோன்றும் சூரிய குல மகுடத்தைச் சூடுவது சிறப்புடையது. என்று வேந்தரும் முனிவரும் அவனைப் பாராட்டினா். (106வது பாடல்)

இ) வருகை (107 பாடல்)

இராமன் தனது தந்தை இருக்கும் இடத்தை பாா்க்கும் போது இங்கு அவா் இல்லாமையைக் கண்டு மனஞ் சோா்ந்து நிற்கும் போது அவன் வருகையைப் பாா்த்து கைகேயி நாயகன் தன்வாயால் இதனைக் கூறமாட்டான் ஆகையால் நானே சொல்வேன் என எண்ணிக் கொண்டு தாய் என எண்ணுகின்ற இராமன் முன்னே யமனைப் போல கைகேயி வந்து நின்றாள். கட்டளை :- (109 , 111 பாடல்கள்) வந்து நின்ற கைகேயியைப் பணிவுடன் வணங்கி நின்ற போது உன் தந்தை உனக்குச் சொல்ல வேண்டிய ஒரு வாா்த்தை உண்டு. அவா் உரைக்க வேண்டுமென்ற அதனை இப்பொழுது உரைக்கிறேன் கேள் "கடல் சூழ்ந்த இவ்வுலகம் அனைத்தையும் பரதனே ஆட்சி செய்ய நீ போய் பெரிய சடைகளைத் தரித்துக் கொண்டு தவவேடம் பூண்டு கொடிய கானகத்திற்குச் சென்று 14 வருடங்கள் கழித்து திருப்பி வருக.

ஈ) பணிமொழி (110) வது பாடல்

என்னுடைய தந்தையே கட்டளை இட அதனை நீங்களே சொல்ல அதனைக் கேட்கும் வாய்ப்பு கிடைக்குமானால் அதை விடப் பெரும் பேறு எனக்கு வேறெதுவும் இல்லை. அதனை சிரம் மேற்கொண்டு செய்வேன். முற்பிறப்பில் செய்த நல்வினைப் பயனாலேயே இப்பாக்கியம் வந்தது. இதைவிட வேறோரு பயன் உள்ளதோ. கட்டளை இடுங்கள் அதனைத் தலைமேற்கொண்டு செய்வேன்.

முகப் பொலிவு 112 வது

அந்தச் சொல்லைக் கேட்ட இராமன் முகப் பொலிவை எம் போன்றவா்களால் கூறமுடியாது கைகேயியின் வாா்த்தையைக் கேட்ட பின்பு அப்பொழுது மலா்ந்த செந்தாமரை மலரைவென்று விட்டது. (5 +5+5+5 = 20 புள்ளிகள்)

e-தக்சலாவ The National e-learning Portal for The General Education

(5) அ. தாய்மை உணா்வு

- கணவன் இழந்த பின்பும் நெல்குத்தி, மாவிடிச்சு. அப்பம் சுட்டு வித்து பெரும்பாடு பட்டு பிள்ளைகளை வளா்த்தும் பழக்க வைத்தல்
- தனது பிள்ளைகளைச் கொண்டு வந்த வேலையையும் செய்விக்க மாட்டாள். "என்ர மகள் படிச்சிட்டா அதனால் கையக்கால ஆட்டாமட்டா எனக் கூறுதல்.
- பிள்ளைகள் மீது அன்பும் ஆசையும் கொண்டவள் மகளைக் காணச் செல்லும் போது பச்சரிசிச் சோறு பொங்கி கட்டுச் சோறு கொண்டு சென்றாள்.

மகளின் அழகைக் கண்டு பெருமை அடைதல்

என்ர மகள் அழகி கையால குத்தின பச்சரிசித்தவிட்டு நிறம்

உதடுகள் எல்லாம் எப்பவுமே சிவந்திருக்கும் நீளமான ஓடிசலா இருப்பா. என்ர பிள்ளையைப் பாா்த்தவன் சீதனம்

( இல்லாமலே அவளைக் கொண்டு போய் விடுவான் )

ஆ. தாய்க்கு எந்த உதவியும் செய்வதில்லை தாயின் கஷ்டங்களை புரியாது பணத்தை அனுப்பும் படி கேட்டல் தனது பிரியாவிடை வைப்பதிற்காக காா்த்திகை மாத அடைமழையினும் உழைப்பு இல்லாத நேரத்திலும் பணத்தை அனுப்பச் சொல்லி கடிதம் எழுதுதல். பணம் தாமதமாகிய பின் கெரியாக அனுப்பச் சொல்லி இரண்டாவது கடிதத்தையும் அனுப்புதல்.

அன்பின்மை

தாயைக் கண்டதும் முகம் நல்ல இல்லை சிரிக்கவும் இல்லை முகத்தை உம் மெண்டு வச்சிருந்தாள் "ஏன் வந்தனி? என்று எரிந்து விழல் காசை வாங்கிக் கொண்டு திரும்பிக் கொண்டு நடத்தல். எங்கம்மா இந்த வேலைக் காரிட்டக் காசு கொடுத்து அனுப்பியிருக்கா எனக் கூறல்.

இ. மூதூர்ப் பிரதேச வழக்குகள்

பிரதேச இயல்பு - வயல்வெளி, சிறுகுளம், வயல்மண் பசைபோன்று ஓட்டிக் கொள்ளும் சுரிமண், தென்னைமரம் இலுப்பைமரம், ஒற்றையடிப்பாதை, கைக்கிளில் பயணம் செய்தல்

உணவுப் பழக்கம் - அப்பம், பச்சரிப்பொங்கல் , புழுங்கலரிசிச்சோறு கொழுக்கட்டை

தொழில் - கூவிக்குக் குத்தல் , கோழிவளர்த்தல், அப்பஞ்சுட்டு விற்றல்

பேச்சுவழக்கு - சீவன் போச்சு,
தொகைச்சிப் போனன், வெள்ளாம, அசந்து போனன்.

ஈ. வாத்தியர் என்னும் பாத்திரம் கதையை வளர்த்துச் செல்லும் ஒரு பாத்திரமாக இருக்கின்றது. ஏனெனில் ஆரம்பத்தில் இருந்து இறுதி வரை தாய் அவரின் மூலமாகவே கதையைக் கூறிக் கொண்டு செல்லுகின்றார். வாத்தியாரை விளித்து அழைத்து ஏன்டாதம்பி..... எனக் கூறுவதாக உள்ளது. வாத்தியார். என்னும் பாத்திரம் எந்த வித வார்த்தையையும் பேசாத பேசாப்பாத்திரமாக இருந்தாலும் அவரை விளித்துச் சென்றே கதை வளர்க்கப்படுகின்றது. தனதுமகள் ஒரு வாத்தியாராக இருந்து தன்னை ஏமாற்றியுள்ளார். ஆகவே இந்த வாத்தியாரும் அவ்வாறு இருக்கக்கூடாது எனும் ஏக்கமும் வருகின்றது.

( 5+5+5+5+5=20 புள்ளிகள் )

06) அ i. வரட்சியினால் மக்கள் அடைந்த துன்பம்

ii. குழந்தைகளுக்கு பாலூட்ட முடியாத நிலை

iii. தருமம் தவவாழ்வு கெட்டு பாவகாரிகளாகி ஆண்மை தன்மை கெட்டு அலைந்தனர்

iv. விருந்தினரைக் கண்டால் வீட்டு வாசல்களை மூடி பெண்கள் நாணினர்.

v. சில சனங்கள் ஊன் அற்றுப்போய் வாடி தசையால் மூடப்பட்ட உடல் எலும்பு வடிவாகி கண்பிரகாசம் மங்கி கைகளும், கால்களும் அதைத்துச் சோர்ந்து மாண்டார்கள்.

vi. சில மக்கள் கூனல் அடைந்தும் குறுகியும் இலைகளையும் கிழங்குகளையும் அவித்து உப்பின்றிப் பிசைந்து உண்டார்கள்

ஆ. இறைவன் மீது கொண்ட நம்பிக்கையில் பிரார்த்தனையில் ஈடுபடல்

இறைவழிபாட்டின் மிகுதியால் மழைய வருவித்தல் பின்நிறத்தல்

இறைவனைப் புகழ்தல் கடவுளே வேதங்களின் வாழ்வே!

எவை இடத்தும் பரவி நின்ற குறை வற்ற பொருளே!

நபி பெருமான இறைவன் மீது கொண்ட நம்பிக்கையால் அவர் துதிக்க இறைவன் அருள் செய்தல்

இ. மகிதல முழுதுந் துதி செய்யக்கரிய மழைமுகில் கருவுதித்தது. மேகமாகிய குழந்தை களங்கமற்ற திக்குகளில் உதித்து செழுமையான மலைகள் மீது தவழ்ந்து ஆகாயத்தில் பொருந்தும் வண்ணம் நடந்து கால்களால் வேகமாக ஓடி சமுத்திரத்தோடு அணைந்து கருப்பமானது உண்டாகி முற்றுப் பெற்று எழுந்து கரிய மேகமானது கருக் கொண்டது. இதனை அணிகள் மூலம் சிறப்பித்துக் காட்டுகின்றார்.

ஈ. இஸ்லாமியப் பண்பாடு

- இறை வழிபாட்டில் ஈடுபடல்
- இறை நம்பிக்கைக் கொள்ளல்
- விருந்தினரை உபசரித்தல்
- தலைப்பிள்ளைப் பெற தாய் மனைக்குச் செல்லல்.
- தர்மநெறியும், தவ வாழ்வும் கொண்டு வாழ்தல்.
- குளிருக்கு எரிமூட்டிக் காய்தல்.

➢ கிழங்கு காய்கள் இவற்றை உப்பின்றிப் பிசைந்து உண்ணுதல்.

(5+5+5+5=20 புள்ளிகள்)

07) அ. நாட்டுக்குப் பெரும் நலத்தை அளிக்கும் நீர்மைய

உண்மைப் பொருளைத் தெளிவுற ஆராய்ந்து அதனைப் பிறருக்குத் தெளிவுபொருந்த அறிவுறுத்துவன. நினைப்போரது உள்ளத்திலே உவகையோடு கூடிய மனோபாவங்களை உண்டாக்குவன. நெஞ்சினை உருக்கிக் கண்ணீர்த்துளி பொருந்துமாறு செய்வன.

ஆ. கற்றோர்க்கன்றி மற்றோர்க்குப் பயன்படாமலிருந்தனவும், தமிழ்மக்களுக்குப் புத்துயிரையும் புதிய ஆற்றலையும் தந்து உலகத்திலுள்ள ஏனைய மக்கட் தொகுதியினரோடு ஒப்புரவிருத்தி உயர்வினை அளிக்கும் நீர் மையனவுமான சங்கச் செய்யுள்களிலே செறிந்து கிடக்கும் காதல் இன்பத்தையும் வீரமேம்பாட்டையும் யாவரும் எளிதில் உணர்ந்து கொள்ளும் பொருட்டு இலகுவான நடையிலமைந்து இன்னிசைத் தமிழ்பாடல்களினால் தமிழ் நாட்டுக்கும், தமிழ் மொழிக்கும் அளத்தற்கரிய பேருபகாரத்தைச் செய்திருக்கின்றார்.

உண்மைப் பொருளைத் தெளிவுற ஆராய்தல் ஆராய்ந்ததனை பிறருக்குத் தெளிவு பொருத்த அறிவுறுத்தல். நினைப்போர் உள்ளங்களில் உவகையோடு கூடிய மனோபாவங்களை உண்டாக்குதல் நெஞ்சினை உருக்கிக் கண்ணீர்த்துளி பொருத்துமாறு செய்தல். இந்நலமனைத்தும் பாரதியாரிடமும் காணப்படுவதனால் அவர் உத்தம புலவரென்பதற்கு எட்டுணையேனும் ஐயமில்லை.

தாய் நாட்டின் மீதும் தாய்மொழிமீதும் பாராதியாருக்குள்ள கரைகடந்த அன்பின் திறத்தை அவரது செய்யுட்கள் காட்டும். கண்ணனைக் காதலனாக் கொண்டு சிருங்காரம் (காதல்) பீபத்ஸம் (அருவருப்பு) பயாநகம் (அச்சம்) அற்புதம் (வியப்பு) ரௌத்திரம் (கடுங்கோபம்) எனும் ரஸங்கள் ஒன்றும் பலவும் பொருந்திவரப் பாடியபாடல்கள் கவிச்சுவை நுகர வல்லார்க்கு தெவிட்டாத தெள்ளமுதமாவன.

கண்ணன் பாட்டில் அவர் காட்டும் ஈடுபாடும் அக்கவிதைத்தொகுதியை "நெஞ்சினை உருக்கும் நீர்மை சான்றது" என்று கூறுவதும் விதந்து நோக்கத்தக்கன.

இ. கட்டுரையின் பெரும்பகுதி கண்ணன் பாட்டுப்பற்றியதாகவே உள்ளது. பாரதநாட்டைப் பற்றிய சில பாடல்களை அலசிய விபுலானந்தர் அந்நாடு தொன்று தொட்டுச் சிவனையும் கண்ணனையும் வழிபட்டதாகக்கூறிக் கண்ணன் பாட்டுக்குறித்து சற்று விளக்கமாகவும் ஈடுபாட்டுடனும் பேசுகிறார். இச்செய்யுட்கள் பக்திச்சுவை ததும்புவன.

➢ சூரியஸ் தோமம், அக்கினிஸ்தோமம், சோமதேவன் புகழ், யாகப்பாட்டு, வேள்விப்பாட்டு என்றிவை வேதசம்கிதைகளின் நடைபெறும் பொருளையும் சார்ந்து நிற்பன.
➢ நெஞ்சினை உருக்கும் நீர்மையன.
➢ புதிய நடையும், புதிய கருத்துக்களும் நிரம்பியவை.
➢ தந்தையாகக் கொண்ட பாட்டிலே காத்தற் கடவுளின் அருட்டிறமும் வேதத்தின் மாண்பும் கூறப்படுகின்றன.
➢ கண்ணனைச் சேவகனாகப் பாடிய பாட்டு ஆண்டவனை அடிமையாகக் கொண்டவர்கள் இம்மை மறுமைச் சுகத்தைப் பெறுபவர் என்பதைக் கூறுகிறது.
➢ கண்ணனைச் சீடனாகக் கொண்டு பாடப்பட்ட பாட்டு ஆண்டவனே நல்லறிவு உணர்த்தும் உண்மை ஆசானாவான் என்பதைக் கூறுகிறது.
➢ கண்ணனைச் சற்குருவாகப் பாடிய செய்யுள் வாழுகின்ற ஞான மார்க்கத்தை நலம்பெறக் கூறும்.
➢ கண்ணனைக் காதலனாகக் கொண்டு பாடியவை கவிச்சுவை நுகரவல்லவர்க்கு தெவிட்டாத தெள்ளமுதானவை.

(6+6+8=20 புள்ளிகள்)

08) அ. இறைவனை முன்னிலைப் படுத்திப்பாடுதல்.

இறைவனின் திருவிளையாடற் சிறப்புக்களைப் பாடுதல்

இறைவன் எழுந்தருளியிருக்கும் ஆலயச் சூழலைப் பாடுதல்.

இறைவனின் படைப்புக்களைப் பாடுதல்.

உ + ம்:- உயிரினங்கள் :- மான், மரை, யானை, பன்றி, கிளி

ஆ. காயாங்கரையிலுள்ள மாதவன் அடிகளை வணங்கி அவரது தரும உபதேசங்களைக் கேளுங்கள் அவரது பாதங்களைப் பணிந்து அவந்தி நகரம் செல்லுங்கள். விலங்கும், நரகமும், பேய்களும் ஆக்கும் தீவினைகளைச் செய்யாதீர்கள். இந்த உலகத்தை ஈடேற்றம் அடையச் செய்யும் ஒருவன் வந்து தோன்றுவான். அவனது அறங்களைக் கேட்டவர்கள். தீய பிறப்புக்களில் இருந்து நீங்குவர். ஏனையவர் இறந்து விடுவர். எனவே அறத்தினை மேற்கொள்ளுங்கள்.

இ. இரண்டாம் உலக மகாயுத்த காலத்தில் அனுபவத்தை வெளிக்காட்டும் இக்கவிதை அன்பை மறுத்து யுத்த மோகம் கொண்ட மனித சமுதாயத்தின் மீது நம்பிக்கையோடு அன்பை வலியுறுத்துவதற்காகவும் அன்பே வெல்லும் எனக் கட்டியம் கூறுவதாகவும் அமைந்துள்ளது.

- பூக்காரி பூ விற்பவளாகக் காட்டப்பட்டாலும் அவள் அன்பை விதைக்கும் சமாதான விரும்பிகளுக்கான குறியீடாக அமைகிறாள்.
- போருக்கும் சமாதானத்துக்கும் இடையிலான போட்டி சந்தைக்காட்சியாக படிமப்படுத்தப்பட்டுள்ளது.
- சமாதானம் என்பது வந்தடையும் கனவு அது கனவுத் தெய்வமாக உருவகிக்கப்பட்டுள்ளது.
- உக்கிர தெய்வமான உருத்திரன் யுத்தத்தையும் அன்பின் வடிவமான சிவன் சமாதானத்தையும் படிமமாய் கொண்டுள்ளன.
- மழைக்காட்சி யுத்த சூழ்நிலையை எடுத்துக் காட்டுகின்றது.
- சூலத்தின் எழுச்சி யுத்தத்தின் விளைவுகளைப் படம்பிடிக்கிறது.

ஈ. வேளாள குலத்துப் பெண்ணான சரஸ்வதிக்கும் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த செல்லத்துரையனுக்கும் இடையிலான உறவை ஆசிரியர் பூடகமாக வெளிப்படுத்தியுள்ளார். வேளாள சமூகத்தில் உகந்தமாப்பிள்ளை கிடைக்காததினால் அவள் முது கன்னியாக வாழ்வு கழிகிறது. இந்நிலை அவள் வீட்டுக்குகள் இறக்க வரும் செல்லத்துரையனிடம் அவளுக்குகள் ஏற்படும் தொடர்பு காதலாக மலர்கின்றது. செல்லத்துரையின் மீது அவளுக்கான துன்பமு காதலும் நாவலில் நுட்பமாக சித்தரிக்கப்படுகின்றது. இறுதியில் சரஸ்வதியின் இறப்பும் செல்லத்துரையனின் தவிப்பும் அவள் கற்ப முற்றது எல்லாம் அவர்கள் இருவரும் மட்டும் அறிந்த இரகசியமாக புதையுண்டு போகிறது.

The National e-learning Portal for The General Education

FWC

| தரம் :- 13 (2017) | புள்ளித்திட்டம் | தமிழ் - II |
|---|---|---|

01) (அ).

| | | | |
|---|---|---|---|
| 1. 1 | 6. 2 | 11. 4 | 16. 1 |
| 2. 2 | 7. 2 | 12. 2 | 17. 5 |
| 3. 3 | 8. 1 | 13. 3 | 18. 1 |
| 4. 5 | 9. 5 | 14. 4 | 19. 2 |
| 5. 3 | 10. 3 | 15. 2 | 20. 5 |

(20 புள்ளிகள்)

(ஆ)

1. ஒரு சொல்லாய் நின்று ஒரு பொருளைத் தந்தும் அதுவே தொடர் மொழியாய் நின்று பல பொருளைத் தருவதுமாய் அமையும் சொற்கள் பொது மொழி எனப்படும்.
   உ+ம் :- தாமரை, வேங்கை
   தாமரை என்பது அப்பெயருள்ள பூவைக் குறிக்கும் போது ஒரு மொழியாகும். அது தாவும்+மரை எனப்பிரித்து தொடர் மொழியாகவும் வரும்.
2. தன்மைப் பெயர் - நான், நாங்கள் நான்+ ஐ = என்னை நாங்கள் + கு = எங்களுக்கு
   முன்னிலைப் பெயர் - நீ, நீங்கள்
   நீ+ ஐ = உன்னை நீங்கள் + கு= உங்களுக்கு
   நான், நாங்கள் என்பது என்னை, எங்களுக்கு எனவும் நீ, நீங்கள் என்பது உன்னை, உங்களுக்கு எனவும் மாற்றமடையும்.
3. நான் சினிமா பார்த்து பொழுது போக்கினேன்
   நான் புத்தகத்தைப் படித்து பரீட்சை எழுதினேன்
   இங்கு, பார்த்து, படித்து என்பன செய்து என்னும் எச்சதொடர் ஆகும்.
   நான் சினிமா பார்த்தேன்.
   நான் பொழுது போக்கினேன் என்னும் இரு வாக்கியங்களையும் செய்து என்னும் எச்சத்தொடர் வாய்ப்பாட்டினால் இணைந்தது நான் சினிமா பார்த்து பொழுது போக்கினேன் என இணைத்துக்காட்டப்பட்டுள்ளது.
4. "ஆ" என்னும் வினா இடைச் சொல் வினா வாக்கியங்களை இணைத்து மாற்று வினா வாக்கியங்களை ஆக்கப் பயன்படுகிறது. இணைக்கப்படும் ஒவ்வொரு வாக்கிய உறுப்பின் இறுதியிலும் இது இணைந்து வரும்.
   உ+ம்:- நீங்கள் வீட்டுக்குப் போகின்றீர்களா?
   நீங்கள் அலுவலகத்திற்குப் போகின்றீர்களா?
   நீங்கள் வீட்டுக்கா அலுவலகத்திற்கா போகிறீர்கள்?
5. உயிர் முன் உயிர் புணரும் போது உடம்படு மெய்யான யகரம் அல்லது வகரம் தோன்றிப் புணர்ந்து வரும்.
   உ + ம் :- பனை + ஓலை – பனையோலை
   இங்கு ,,ய்' என்னும் உடம்படுமெய் தோன்றியுள்ளது.
   பலா + இலை – பலாவிலை
   இங்கு ,,வ்' என்னும் உடம்படு மெய் தோன்றியுள்ளது.

(2x5=10 புள்ளிகள்)

02) அ. சுருக்கத்தில் இடம்பெற வேண்டிய அம்சங்கள்

- வாழ்க்கையின் முதற்படி ஊன், உறையுள் முதலியவற்றை கடின உழைப்பினால் தேடிப் பெற்றுக் கொள்வதாகும்.
- இவற்றை நிறைவு செய்வவோரே இரண்டாம் படியானகலை வாழ்க்கையை எய்துவர்.
- வறுமையில் தொடர்ந்தும் வாடுவோரால் இரண்டாம் படியினை அடையமுடியாது.
- வறுமையுற்ற நிலையில் புலன்களுக்கு விருந்தளிக்கும் கலைகளைத் தேடி அவற்றின் வாயிலாக இன்பம் அனுபவிக்க முயல்வர்.
- கலை வளர்ச்சியே மக்கள் வாழ்க்கையாக அமைகிறது. (10 புள்ளிகள்)

ஆ. i. அறிவு வளர்கின்றது. தொழில் பெறுகின்றோம். உலகம் மதிக்கிறது. கடவுள் உண்மையை வலியுறுத்துகிறது.

ii. நாம் கற்ற கல்வியினால் இறைவனை வணங்கி துதிக்கா விட்டால் அக்கல்வியனால் எந்தப்பயனும் இல்லை.

iii. இளமைப் பருவம்

iv. கல்வியினால் கடவுள் நம்பிக்கை வரும் கடவுள் நம்பிக்கை உள்ளவன் கல்வியின் முன்னேற்றம் அடைவான்.

v. செம்மையான மொழிநடை, தர்க்க ரீதியான மொழிநடை, எடுத்துக்காட்டுக்களுடன் விளக்கம்.

உ+ம் :- திருக்குறள், வாழைப்பழத்தில் ஊசி (2+2+2+2+2=10 புள்ளிகள்)

03) அ.

i. பூகோளமயமாக்கம் பற்றிய பொதுவான விளக்கம்.

ii. பண்பாடு பற்றிய விளக்கம்

iii. பூகோள மயமாக்கலால் பண்பாட்டில் ஏற்படும் பாதிப்புக்கள், அரசியல், ஊடகம், உணவு, உடை, வீடு, கல்விமுதலியன.

iv. பல்லினப் பண்பாட்டின் உருவாக்கமும் அதன் சாதக, பாதக விளைவுகளும்.

ஆ. தமிழ் ஒரு பல்பண்பாட்டு மொழி

- பல்பண்பாட்டு பற்றிய விளக்கம்
- பண்டைக் காலத்திலிருந்து தமிழ் பல்வேறு சமயத்தவர்களின் மொழியாக இருந்து வருதல். முதலில் சைவர்கள், வைஷ்ணவர்கள், பௌத்தர்கள், சமணர்கள் பின்னர் இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் இவர்களின் பயன்பாட்டு மூலம்.
- தமிழ் பன்முகப்பட்டு வளம் பெற்றமை.
  தமிழ் பல்வேறு நாட்டினரின் மொழியாக இருப்பதனால் அவ்வந்நாட்டுப் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் தன்மை. தமிழ்நாடு இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் இந்நாடுகளின் பண்பாட்டு அடையாளம் தமிழில் வெளிப்படும் தன்மை.
- கடந்த சுமார் 30 ஆண்டுகளாக ஐரோப்பிய நாடுகள், கனடா, அவுஸ்ரேலியா முதலிய பிறமொழிப் பண்பாட்டுப் பிரதேசங்களில் தமிழ் வழங்குதல்.
- தமிழின் சொல்வளம் பல்பண்பாட்டைப் பிரதிபலித்தல்

இ. ஊடகங்கள் பற்றிய அறிமுகம்

அச்சு ஊடகங்கள்
இலத்திரனியல் ஊடகங்கள்
ஊடகங்களின் பணி
ஊடக சுதந்திரம் என்பது
(உண்மை, நடுநிலைமை, பொதுசன அபிப்பிராயம்)
ஊடக சுதந்திரத்தால் ஏற்படும் பயன்கள்
ஊடக சுதந்திரத்தின் துஷ்பிரயோகம்
இன்று ஊடக சுதந்திரம் எதிர்நோக்கும் நெருக்கடிகள்

ஈ. பூமியில் நீரின் அளவு

அதில் குடிநீரின் பங்கு கடல் நீரின் பங்கு
நீர் உயிர் வாழ்க்கைக்கு மிக அவசியம் :- குடிக்க, குளிக்க
விவசாயம், கைத்தொழில், நீர் மின் உற்பத்தி
நீர் இல்லாமையால் ஏற்படும் பாதிப்புக்கள்
நாடுகள், மக்கள், உயிரினங்களை எடுத்துக் காட்டல்.
நீர் பற்றிய அறிஞர்கள், இலக்கிய வாதிகள் பற்றிய கூற்றுக்கள்.

உ. எண்ணெழுத்திகழேல்.

- எண் என்பது கணிதம் எழுத்து என்பது மொழி கணிதமும் மொழியும் ஒரு மனிதனின் வாழ்வில் இன்றியமையாதவை.
- எண் அறிவு இல்லாவிட்டால் எமது அன்றாட தேவைகளை நிறைவு செய்து கொள்ள முடியாது.
- எழுத்தறிவு இல்லாவிட்டால் எந்தத் தொடர்பாடலையும் ஏற்படுத்திக் கொள்ள முடியாது.
- எனவே இரண்டு கல்வியும் எமது வாழ்க்கைக்கு இன்றியமையாதவை ஆகும்.
- அதனை நாம் தவிர்க்காது சிறு வயதில் இருந்தே கற்றுக் கொள்ள வேண்டியதன் அவசியம்.

(20 புள்ளிகள்)
(6+4+10)

04) அ. சங்கமருவிய காலத்தில் சமணபௌத்த மதத்துறவிகளின் வருகை.

சங்ககால அகவாழ்வு, புறவாழ்வில் ஏற்பட்ட சிதைவு, இழப்பு
மக்களுக்கு காதலிலும் போரிலும் இருந்த வெறுப்பு.
களப்பிரர் வருகையினால் ஏற்பட்ட ஸ்திரமற்ற அரசியற் சூழல்
கொடுங்கோலாட்சி, படையெடுப்பு, வடமொழிச் செல்வாக்கு
ஆட்சியாளர்களுக்கும் அறக்கருத்தை ஆதரித்தமை.

ஆ. காதலையும் வீரத்தையும் (அகம்,புறம்) அடிப்படையாகக் கொண்டு இலக்கியம் அமைய, சங்க காலத்தில் பெருவழக்கில் இல்லாத அறப்போதனைகள் சங்கமருவிய காலத்தில் பெருவழக்காயின.

சங்கப் பாடல்கள் பெரும்பாலும் தனிநிலைச் செய்யுள்களாக அமைய சங்கமருவிய காலப்பாடல்கள் தொடர்நிலைச் செய்யுள்களாக அமைதல்.

சங்கப்பாடல்கள் சுருங்கச் சொல்லி விளங்க வைப்பன.

சங்கமருவிய காலப் பாடல்கள் எடுத்துக் கொண்ட பொருளை விரிவாக வலியுறுத்திக் கூறும் இயல்பின.

சங்கப்பாடல்கள் அகவற்பா, வஞ்சிப்பா யாப்பில் அமைய, சங்கமருவிய காலப்பாடல்கள் வெண்பா, விருத்தப்பா யாப்பில் அமைந்தன.

சங்ககால இலக்கியங்கள் பெரும்பாலும் சமயசார்பு அற்றனவாய் அமைய சங்கம் மருவிய கால இலக்கியம் சமயசார்புடையனவாய் விளங்கின.

இ. பக்தி நெறியின் ஊற்றாக கொள்ள முடியும்

சங்கமருவிய காலத்தில் பிற்பகுதியில் காரைக்கால் அம்மையாராலும் முதல் ஆழ்வார்களாலும் பக்தி கால்கோள் செய்து வைக்கப்படுகின்றது. சைவ பக்தியை அம்மையாரும், வைணவ பக்தியை முதல் மூவாழ்வார்களும் கைக்கொள்கின்றனர்.

இறைவனை முன்னிலைப்படுத்தி அவனது தோற்றம் அருள் என்பவற்றைத் தாமே அனுபவித்துப் பாடுகின்றனர்.

பக்தி இலக்கிய வடிவமான பதிக அமைப்பு, விருத்தப்பா யாப்பு இவை அம்மையாரால் கைக்கொள்ளப்படுகின்றது. புராண இதிகாசக்கதைகளை பக்தி இலக்கியத்தில் சித்தரித்தல்.

உ + ம் :- செருக்கினால் வெற்பெடுத்த அருக்கனை இசையினால் இறைவனை காணும் மரபு.

(5+5+5=15 புள்ளிகள்)

05) அ.

- ஆழ்வார்கள் கண்ணன் மீது கொண்ட பக்தியனுபவங்களைத் தாமே நேரே கண்டு அனுபவித்துப் பாடியுள்ளார்கள்
- கண்ணனோடு ஒரு உறவை ஏற்படுத்திப் பாடியுள்ளார்கள்
- அவர்களின் பக்தி இலக்கியங்கள்

1. ஆண்டாள் - திருப்பாவை, நாச்சியார் திருமொழி.
2. தொண்டரடிப்பொடியாழ்வார் - திருமாலை, திருப்பள்ளி எழுச்சி
3. திருமங்கையாழ்வார் - திருவெழுகூற்றுலுக்கை, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், பெரியதிருமொழி, சிறியதிருமடல், பெரியதிருமடல்.
4. பெரியாழ்வார் - திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழி
5. குலசேகராழ்வார் - பெருமாள் திருமொழி, திருவிருத்தம், திருவாசியம், பெரிய திருவந்தாதி
6. நம்மாழ்வார் - திருவாய் மொழி
7. மதுரகவியாழ்வார் - கண்ணின்நுண் சிறுத்தாம்பு…. எனத் தொடங்கும் பதிகம்
8. திருமாலிசையாழ்வார் - நான்முகன் திருவந்தாதி, திருச்சந்த விருத்தம்
9. திருப்பணாழ்வார் - அமலன் ஆதிபிரான் எனத் தொடங்கும் பதிகம்

ஆ. பக்தி சாரா இலக்கியங்கள் பக்தி சாரா இலக்கியங்களை 3 வகையாக நோக்கலாம்.

அ. சிற்றிலக்கியங்கள்

நந்திக் கலம்பகம்
முத்தொள்ளாயிரம்
பாரத வெண்பா – பெருந்தேவனார்
பெருங்கதை (கொங்குவேளிர்மாக்கதை)
உதயணன் கதை
பாண்டிக் கோவை

ஆ. உரைநடை இலக்கியங்கள்

ஸ்ரீ புராணம்
கஜசிந்தாமணி
இறையனார் களவியலுரை

இ. இலக்கண நூல்

சங்கயாப்பு, பாட்டியல்

இ.

- பல்லவர் காலப் பக்தியில் அகத்திணை இறைவனுக்கும் மானிடர்க்கும் இடையிலான காதலாக உள்ளது.
- ஒரு தலைக்காதலாக உள்ளது.
- தெய்வீகக் காதல் உ+ம் - ஆண்டாள், மணிவாசகர்
- இறைவனை முன்னிலைப் பரவல், படர்க்கைப் பரவல் நிலையில் பாடுவதாக உள்ளது.
- காதலுக்கு முன்னுள்ள நிலைகளான காட்சி, ஐயம், தெளிவு இவை பற்றிக் கூறுகின்றன.

உ+ம் - திருக்கோவையார்

(5+5+5=15 புள்ளிகள்)

06) அ.

- பெரும்பாலும் சமயச் சார்பு, தத்துவச் சார்பு, பழமைபோற்றும் பண்பு, ஆலயவரலாறு, இறைவனின் அருட்செயல்கள் என்பவற்றை எடுத்துக் கூறும் தலபுராணங்கள், பிரபந்தங்கள்
- தத்துவக்கருத்துக்களை நேரடியாகவும் கதைகள் வாயிலாகவும் கூறுதல்.
- வசைக்கவி, விகடகவி, சிலேடைக்கவி, ஆசுகவி முதலிய கவிச்சிறப்புக்களை உடையன.
- பழைய இலக்கண இலக்கியங்களுக்கு உரை எழுதல்
- எளிதில் பொருள்விளங்கிக் கொள்ள முடியாத வித்துவச் செருக்கு மிக்கபாடல்
- அடிநிலை மக்களின் வாழ்வியலைச் சித்தரிக்கும் இலக்கியங்கள்
- மணிப்பிரவாள நடை போற்றப்பட்டது.
- அதீத கற்பனை சொல்லலங்காரம், சொல்லடுக்கு, சந்தச் சிறப்பு

ஆ. நாயக்கர் காலத்திலே 96 வகையான பிரபந்த வகைகளில் பெருமளவான பிரபந்தங்கள் இக்காலப்பகுதியில் தோன்றியுள்ளன.

1. பரணி – மேகவதைப் பரணி, பாசவதைப்பரணி, அஞ்ஞைவதைப் பரணி
2. உலா – திருவாரூருலா, திருவானைக்கா உலா, ஏகம்பநாதருலா, மதுரைச் சொக்க நாதருலா, திருக்காளத்தி நாதருலா.
3. பிள்ளைத்தமிழ் - மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், முத்துக்குமாரசுவாமிப் பிள்ளைத்தமிழ்
4. நான்மணிமாலை – நால்வர் நான்மணி மாலை, திருவாரூர் நான்மணி மாலை
5. மும்மணிக் கோவை – பண்டார மும்மணிக்கோவை, சிதம்பர மும்மணிக்கோவை
6. தூது – நெஞ்சு விடுதூது
7. சதகம் - தொண்டை மண்டலச்சதகம்

இ. இக்காலத்தில் தோன்றிய பொதுமக்கட் சார்பான இலக்கியங்களாக பள்ளு, குறவஞ்சி, அம்மானை, கீர்த்தனை, நொண்டி நாடகம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

உ+ ம் :- முக்கூடற் பள்ளு, திருக்குற்றாலக்குறவஞ்சி, நொண்டி நாடகம், இராம நாடகக் கீர்த்தனை இவற்றின் பண்புகளாக

- பொதுமக்களைக் கருப்பொருளாகக் கொண்டமை.
- நாடகப்பாங்கு
- இசைப்பாங்கு
- நகைச்சுவை, காமச்சுவை
- பேச்சுவழக்கு மொழிகையாளப்பட்டமை
- சமயச்சார்பானது.

(5+5+5=15 புள்ளிகள்)

07) அ. ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்தில் சமயம், வரலாறு, சோதிடம், மருத்துவம் சார்ந்த நூல்கள் தோற்றம் பெற்றன.

- சோதிட நூல் - சரசோதி மாலை, செகராச சேகரமாலை
- வைத்தியநூல் - செகராச சேகரம், பரராசசேகரம்
- சமயம் சார்ந்தவை – தட்சிண கைலாய புராணம், திருக்கைலாச புராணம், கதிரமலைப் பள்ளு
- வரலாறு சார்ந்தவை – வையாபாடல், கைலாயமாலை, பரராசசேகரன் உலா
- காப்பியம் - இரகுவம்சம் (மொழிபெயர்ப்பு நூல்)
- நாட்டார் வழிபாடு சார்பானது – கண்ணகி வழக்குரை, சிலம்பு கூறல், கோவலனார் கதை

ஆ. ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்தில் சைவசமயம் உயர்நிலையில் காணப்பட்டது. பிராமண குலத்தவர் அரசியல், கல்விப்புலமை பெற்றிருந்தனர். அவர்களே நூல்களை எழுதினர்.

- புராண படலம் முக்கியம் பெற்றது. இதனால் சமயச் சார்புடைய இலக்கியங்கள் எழுந்தன.
- கற்றவரை மனங்கொண்டும் சாதாரண மக்களுக்காகவும் ஆக்கப்பட்டன.
- வைத்திய சோதிட நூல்களில் குறியீட்டுத் தன்மை காணப்பட்டது
- சிலம்பு கூறல், கண்ணகி வழக்குரை இவற்றில் நாட்டாரியற் போக்கு காணப்படுகிறது.
- யாப்பு நெறிக்குட்பட்டு உவமை, உருவகம், சிலேடை முதலான அணிப்பிரயோகங்கள் காணப்பட்டன.

08) அ. பாவலர் துரையப்பாபிள்ளை 1872 – 1929

- ஈழத்தில் இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்களுக்கு முன்னோடியாக விளங்குபவர்.
- சமூகப் பிரச்சினைகளை கவிதைப் பொருளாக கொண்டவர்.
- பத்திரிகையாளர் 1901 இல் உதயதாரகையின் ஆசிரியராகவும் 1921 இல் இருந்து இந்து சாதனத்தின் ஆங்கில உதவி ஆசிரியராகவும் கடமையாற்றியவர்.
- 1907 இல் மாணவர் சஞ்சிகை வெளியிட்டமை.
- பொதுமக்கள் சார்பான கும்மிகள், கீர்த்தனைகள்
- எளிய பதங்களை ஆக்கங்களில் பிரயோகித்தவர்.
- சகல குணம்சபன்னன் என்ற நாடகம் எழுதியவர்.
- பக்திப் பாடல்கள்

ஆ. பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை

- மரபு வழிப்புலமையும், மேலைநாட்டு மொழிப் பயிற்சியும்
- ஆய்வுகள் :- திராவிட மொழி ஆராய்ச்சி
- நாவல் :- பூஞ்சோலைக் காவலன், நீரரமகளிர், வாழ்க்கையின் விநோதங்கள்
- நாடகம் :- மொழிபெயர்ப்பு நாடகங்கள் - (வடமொழி) மாணிக்கமாலை
  வரலாற்று நாடகம் - சங்கிலி
  அரசியல் நாடகம் - துரோகிகள்
  சமூக நாடகங்கள் - நானாடகம், இருநாடகம் (பேச்சு தமிழ்)
- கவிதைகள் :- காதலியாற்றுப்படை, தூவுதும்மலரே
- பண்பாட்டாய்வு :- ஈழத்தமிழர் வாழ்வும் வளமும்

இ. சித்திலெப்பை

- அறிமுகம் : கண்டி : வழக்கறிஞர்
- ஈழத்தின் முதல் நாவல் - அசன் பேயின் கதை (1885)
- பத்திரிகை – முஸ்லிம் நேசன், ஞானதீபம்
- கதை – அபூநவாஸின் கதை
- நூல்கள் - உமர் பாஷாவின் யுத்த சரித்திரம், இலங்கைச் சோனகர் கதை, அஷ்ராருல்.
- கட்டுரைகள், சமயம், வரலாறு, பண்பாட்டு தொடர்பானவை.

ஈ. வ. அ. இராசரத்தினம்

- சிறுகதைகள் பலவற்றையும், நாடகங்களையும், நாவல்களையும் எழுதியவர்.
- நூற்பதிப்பு, மொழிபெயர்ப்பு, கவிதை, விமர்சனம், கட்டுரையாக்கம்
- பிரதேச மணமுடைய படைப்புக்கள்:- சிறப்பாக மூதூர்க் கரையோர மக்களின் வாழ்வைப் பிரதிபலிக்கின்ற ஆக்கங்கள்
- சிறுகதைத் தொகுப்புக்கள்:- தோணி, கொட்டியாரக்கதைகள், திணைக்கதைகள்
- நாவல்கள் :- கொழுகொம்பு, துறைக்காரன், கிரௌஞ்சப் பறவைகள், ஒரு வெண் மணற்கிராமம் காத்துக் கொண்டிருக்கிறது.
- ஒரு காப்பியம் நிறைவு பெறுகிறது.
- இலக்கிய நிகழ்வுகள்

உ. டொமினிக் ஜீவா

- 1950 களின் பின் ஏற்பட்ட சமுதாய, அரசியல், வரலாற்றுக்குக் காலகட்ட சிறுகதை எழுத்தாளர்களுள் மிகமுக்கியமானவர் டொமினிக் ஜீவா.
- சமூக அரசியல் போராட்டங்களில் இலக்கியம் பிரிக்க முடியாத உறவுடையது என்ற கருத்து நிலையோடு தனது சிறுகதைகளை எழுதியவர்.
- மார்க்ஸிஸ் சித்தாந்தத்தை ஏற்றுக் கொண்டு சமுதாய அரசியல் பிரக்ஞையோடு கதைகள் எழுதியவர்.
- சமுதாய ஏற்றத்தாழ்வு, தொழிலாளர் போராட்டம், சாதி அடக்குமுறை, வறுமை, சுரண்டல் ஆகியன இவரது கதைகளின் கருப் பொருளாக அமைந்தன.
- அடிநிலை மக்களின் பிரச்சினைகளை மிக யதார்த்தத்துடன் தனது கதைகளில் சித்தரித்தவர்.
- இவரது கதைகள் சமுதாய சீர் திருத்தத்தை வற்புறுத்துவதனை விட சமுதாய மாற்றத்தை அவாவியமை.
- பாதுகை, தண்ணீரும் கண்ணீரும், சாலையின் திருப்பம், டொமினிக் ஜீவா சிறுகதைகள் ஆகியன இவரது சிறுகதைத் தொகுதிகள்.